கிறது, ஆகவே, பெனிபிட் காஸ்ட் ரேஷியாவைக்கூடக் கணக்கில் எடுக்காமல் உடனடியாக அதற்குரிய ஆய்வுகளை நடத்தி, அந்த ஆய்வு அறிக்கைகளை அரசுக்கு அனுப்பச் சொல்லியிருக் கிறேன். ஆகவே, ஆய்வுகள் தருந்த அளவுக்கு தேவையான அளவுக்குப் பயனைத் தரக்கூடியது என்று தெரிவிக்கின்ற சூழ்நிலை இருக்குமானால் நிச்சயமாக அரசு பரிவோடு இந்தத் திட்டத்தைப் பரிசீலிக்கும்.

திரு. உ. சுப்பிரமணியன் :பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டுகள், குளங்கள் போன்றவைகள் எல்லாம் அமைப்பது உணவு உற்பத்தியைப் பெருக்கி, நாட்டு மக்களுக்கு உணவு வழங்கவேண்டுமென்ற கருத்தில்தான். ஆகவே நீண்ட தொலை நோக்குடன் இந்த பெனிபிட் காஸ்ட் ரேஷியோவை இந்தத் துறைக்கு அறவே நீக்கிவிட்டு, எந்த இடத்தில் அவசியமோ அந்த இடத்தில் எல்லாம் உணவு உற்பத்தியைப் பெருக்கு வதை நோக்கமாகக் கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் பதில் வழங்குகின்ற நேரத்தில் இப்பொழுதே மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்தினுடைய அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகின்றது என்று தெரிவித்தேன், அந்தக் காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வி கேட்க வேண்டிய அவசியம் இல்லாமல், இந்த அரசு செய்து வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகாநதியை தாமிரபரணி நதியுடன் இணைக்கும் திட்டம்

36* வினா எண் 16531—திரு. பி ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) மகாநதியையும் தாம்பிரபரணி நதியையும் இணைக்கும் பணியை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது பற்றி தமிழக அரசுக்கு தகவல் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ா. சை. மு யூசுப். : (அ) ஆம்

(ஆ) நாட்டின் நீர்வள அபிவிருத்திக்காக தேசிய முன் நோக்கு திட்டத்தின் கீழ் தீபகற்ப நதிகளான மகாநதி, கோதாவரி இவற்றின் உபரிநீரை தெற்கே கிருஷ்ணா, பெண்ணாறு, காவேரி படுகைகளுக்குத் திருப்பி நீர்வளத்தை மேம்படுத்தும் திட்டம் ஒன்று மத்திய அரசின் ஆய்விலுள்ளது. மகாநதியை தாம்பிரபரணியுடன் இணைத்து கடலுக்கு வீணாகச் செல்லும் பகற்ப நதிகளின் வெள்ளநீரை தெற்கு நோக்கி திருப்பி

விடுதல் சம்பந்தமான விரிவான ஆய்வுப்பணிகளை மேற்கொள்ளும் செயற்குறிப்பு ஒன்றும் மத்திய அரசின் பல்வேறு அமைப்புகளின் ஆய்விலுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு என்ற அடிப்படையிலே இருக்கிற இந்தத் திட்டத்தை விரைவாக மத்திய அரசாங்கம் அமல் நடத்த வேண்டுமென்கிற முறையிலே, அவற்றைக் கண்காணிப்பதற்கும் துரிதப்படுத்துவதற்கும் மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் இணைந்து ஒரு ஆலோசனைக் குழுவை, குறிப்பாக தொழில் நுணுக்கக் குழுவைப் போட்டு வேலையை துரிதப்படுத்த தமிழக அரசு மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்துமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது அப்பேர்ப்பட்ட நோக்கத்தில் தான். வடக்கே வீணாகிக் கொண்டிருக்கிற தண்ணீரை, வறட்சியான இந்தப் பகுதிகளுக்கு திருப்பி விடுவதற்காகத்தான் தேசிய அளவில் ஒரு மாஸ்டர் பிளான் என்று சொல்வார்களே அந்தத் திட்டத்தைத் தயாரித்துஅதைக் கடைப்பிடிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கத்தான் இந்த முயற்சி எடுக்கப்படுகிறது .அதனை தயாரித்துஅமல்படுத்துவதில் ஏற்படும் சிக்கல்களை, பிரச்னைகளைத் தீர்ப்பதகாகத்தான். Nation..l water Resources Council என்ற குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவில் பிரதம அமைச்சர் தலைவராகவும் ஒவ்வொரு மாநில முதலமைச்சரும் உறுப்பினர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாநதி, தாமிரபரணி இணைப்பிற்கான திட்டம் ஆய்விலே இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதற்கிடையில்ல பல நதிகள் இருக்கின்றன. அந்த நதிகளும் இந்தத் திட்டத்திலே சேர்த்துக் கொள்ளப்படுமா என்பதை அறிய விருப்புகிறேன், குறிப்பாக வைகை நதி.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நான் மூலக் கேள்விக்கு பதில் சொல்கிற போது உபரி நீரை தெற்கே கிருஷ்ணா, பெண்ணாறு, காவேரி போன்றவற்றிற்கு திருப்பி நீர்வளத்தை பயன்படுத்துவதைப் பற்றி சொல்லியிருக்கிறேன். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அந்தச் சந்தேகம் தேவையில்லை. திட்டம் உருவாக்கப்படுமானால் நிச்சயமாக (குறுக்கீடு) வைகையை கடந்துதான் தாமிரபரணி வருகிறது. ஆகவே அந்த வகையிலே வைகையும் சேர்க்கப்படும். ஆனால் இந்தத் திட்டம் எப்போது வருமோ அப்போதுதான் வைகை சேர்க்கப்படும்.